எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், 110, அண்ணா சாலை, சென்னை-2.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இணை இயக்குநர் அவர்களின்

செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: திரு.க.கண்ணன், எம்.காம்., இணை இயக்குநர்

ஆணையரக செ.மு.ஆ.எண்.இ1/13189/2024 நாள்: 07.05.2025.

பொருள்: பணியமைப்பு – எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம் சென்னை-02 – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி உதவியாளர் தொகுதி II (அ) பணிகள் (Group IIA) பணியிடம் நேரடி நியமனம் – 25.2.2023 அன்று நடைப்பெற்ற எழுத்துத் தேர்வு – நேரடி நியமனம் 42 நபர்களை எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கு உதவியாளர்களாக ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டது –உதவியாளர்களின் தற்காலிகப் பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-03 கடித எண். 1086 PSD-A2/2024, நாள்.02.07.2024.
2. அரசாணை 73 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (B) துறை நாள்.08.07.2015.
3. ஆணையரக செயல்முறை ஆணை எண். இ1/13189/2024, நாள்.22.7.2024.

-------

பார்வை 1-ல் காணும் 02.7.2024 நாளிட்ட செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 அவர்களின் கடிதத்தின்படி, 25.2.2023-ல் நடத்தப்பட்ட தொகுதி-II எழுத்துத்தேர்வில் தேர்ச்சி பெற்ற 42 நபர்களை எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கு உதவியாளர்களாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2) இதனைத் தொடர்ந்து, பார்வை-2ல் காணும் செயல்முறை ஆணையின்படி எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நபர்களுக்கு ஆணையரகம் சென்னை-2-இல் தற்காலிகமாக உதவியாளர்களாக பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது. தனியர்கள் அட்டவணையில் கலம் 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் பணியில் சேர்ந்து உதவியாளர்களாக பணிபுரிந்து வருகிறார்கள்.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி (திரு./ திருமதி/செல்வி) | பணியமர்த்தப்பட்ட அலகு | பணியேற்பு செய்த நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | த.பிரீத்தி | ஆணையரகம், சென்னை-2 | 26.7.2024 |
| 2. | மா.திவ்யதேவி | ஆணையரகம், சென்னை-2 | 25.7.2024 |
| 3. | ச.பாலாஜி | ஆணையரகம், சென்னை-2 | 01.8.2024 |

| வ. எண். | பெயர் மற்றும் பதவி (திரு./ திருமதி/செல்வி) | பணியமர்த்தப்பட்ட அலகு | பணியேற்பு செய்த நாள் |
|---|---|---|---|
| 4. | கோ.ஹேமலதா | ஆணையரகம், சென்னை-2 | 25.7.2024 |
| 5. | மு.தீட்சிதா | ஆணையரகம், சென்னை-2 | 31.7.2024 |
| 6. | பா.கோகுல விக்னேஷ் | ஆணையரகம், சென்னை-2 | 26.7.2024 |
| 7. | இல.முருகபூபதி | ஆணையரகம், சென்னை-2 | 01.8.2024 |
| 8. | நா.நாகார்ஜுன் | ஆணையரகம், சென்னை-2 | 30.7.2024 |
| 9. | ஜா.புருசோத் | ஆணையரகம், சென்னை-2 | 01.8.2024 |
| 10. | ம.ஓ.ஆஷியானா | ஆணையரகம், சென்னை-2 | 26.7.2024 |
| 11. | ச.அருண்குமார் | ஆணையரகம், சென்னை-2 | 26.7.2024 |
| 12. | மு.பாரதி | ஆணையரகம், சென்னை-2 | 31.7.2024 |

3) பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தில், பத்தி எண்.18 மற்றும் 19-ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களின்படி, மேல் குறிப்பிடப்பட்டுள்ள தற்காலிக உதவியாளர்களின் பணிவரன்முறை கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டது.

The regularization is subject to the outcome of W.A.(MD)No.181 of 2023 & C.M.P (MD) No.2247 of 2023 pending before the Hon'ble Madurai Bench of Madras High Court and other cases if any pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of Madras High Court relating to this recruitment.

4) எனவே, மேற்கண்ட மேதகு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள குரூப்-II பணியாளர் தேர்வு குறித்த வழக்குகளின் (writ petitions) தீர்ப்பிற்கு உட்பட்டது என்ற நிபந்தனைக்குட்பட்டு, ஆணையரகம் சென்னை-2-இல் பணிபுரியும் மேற்காணும் 12 உதவியாளர்களின் தற்காலிகப் பணி அட்டவணையில் அவரவர் பெயருக்கெதிரே கலம் 4-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உதவியாளர் பதவியில் பணியேற்பு செய்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

5) மேலும், பணிவரன்முறைபடுத்தப்பட்ட நாள் முதல், இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்தும், இரண்டாண்டு கால தகுதிகாண் பருவகாலத்தினை தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்திற்குள் நிறைவு செய்ய வேண்டும் எனவும், தகுதிகாண்பருவ காலத்தில் பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர் அடிப்படை பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

6) பார்வை-2ல் காணும் 08.07.2015 நாளிட்ட அரசாணையின்படி மேற்காணும் 12 தற்காலிக உதவியாளர்களும் தகுதிகாண் பருவ காலத்தில் கீழ்காணும் பயிற்சி மற்றும் துறைத் தேர்வுகள் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

a) Complete the Foundation Training for a period of two months at Civil Services Training Institute, Bhavanisagar; and

b) Pass the following tests, namely:-

(1) Tamil Nadu Government District Office Manual Test

(2) Account test for Subordinate Officers Part-1

(3) Stationery and Printing Department Test

i. Part-A-Stationery Manual, Volume I&II

ii. Part-B-Government Press Office Manual.

க.கண்ணன்,
இணை இயக்குநர்.

பெறுநர்

சம்பந்தப்பட்ட பணியாளர்கள்

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை-02

நகல் பெறுநர்

1) உதவி இயக்குநர் (நிருவாகம்), ஆணையரகம், சென்னை.2
2) ஆணையரின் நேர்முக உதவியாளர், ஆணையரகம், சென்னை-2
3) உதவி இயக்குநர் (இ.ச.) ஆணையரகம், சென்னை.2
4) சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம் (கிழக்கு) சென்னை - 8.
5) கண்காணிப்பாளர் 'இ' பிரிவு/ "இ4" உதவியாளர் மற்றும் இ2 இளநிலை உதவியாளர், ஆணையரகம், சென்னை-2.
6) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 (தகவலுக்காக அனுப்பப்படுகிறது).
7) உதிரி - 3 நகல்கள்

//உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

ஆணையரின் நேர்முக உதவியாளர்.

13/5/25